# உங்களது உரிமைகளை அறிந்துகொள்ளுங்கள்

அமெரிக்க ஐக்கிய அரசுகளில் பணிபுரியும் சமயத்திலான உங்களது உரிமைகளை விவரிக்கும் ஒரு தகவல் பிரசுரம்.

தேசிய மனிதக் கடத்தல் உடனடித்
தொலைபேசி எண் **1-888-373-7888**
(அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்குள்ளாக)











## உங்களது உரிமைகளை அறிந்துகொள்ளுங்கள்

அமெரிக்க ஐக்கிய அரசுகளில் தங்கியிருப்பது உங்களுக்கு நிறைவானதாக அமையும் என்று நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஆனாலும், மோசமான சூழ்நிலைகள் அமைய நேர்ந்தால், உங்களுக்கு உரிமை உள்ளது என்பதுடன் நீங்கள் உதவியும் பெறலாம்!

### உங்களுக்கு பின்வருவனவற்றுக்கான உரிமை உள்ளது:

- நியாயமாக ஊதியமளிக்கப்படுவதற்கு
- பாரபட்சம் காட்டப்படாமல் இருப்பதற்கு
- பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் அத்துமீறல் இல்லாமல் இருப்பதற்கு
- ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான பணியிடம் பெறுவதற்கு
- தொழிற்சங்கம், புலம்பெயர்ந்தோர் மற்றும் தொழிலாளர் உரிமைகளுக்கான குழுக்களிடமிருந்து உதவி கோருவதற்கு
- தவறுகப் பயன்படுத்தும் பணிச் சூழலை விட்டு வெளியேறுவதற்கு

**நீங்கள் தவறாக நடத்தப்பட்டால், தேசிய மனிதக் கடத்தல் உடனடித் தொலைபேசி எண் 1-888-373-7888 ஐத் தொடர்புகொள்ளவும் (அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்குள்ளாக), மற்றும் "HELP" என்று 233733க்கு குறுஞ்செய்தி அனுப்பவும் (அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்குள்ளாக) அல்லது *NHTRC@POLARISPROJECT.ORG*ல் மின்னஞ்சல் அனுப்பவும்.**

**பயிற்சி பெற்ற வல்லுநர்கள் 200க்கும் மேலான மொழிகளில் உங்களுக்கு உதவுவதற்காக எப்போதும் உள்ளனர். நீங்கள் உங்களது பெயரைத் தெரிவிக்கவோ அல்லது அடையாளப்படுத்திக்கொள்ளவோ வேண்டியதில்லை. *WWW.TRAFFICKINGRESOURCECENTER*.ORGல் கூடுதலாக அறிந்துகொள்ளுங்கள்.**

நீங்கள் உடனடி அபாயத்திலிருந்தால் 911ல் (அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்குள்ளாக) காவல் துறையை அழைக்கவும். அவர்களிடம் அவசர நிலையையும் உங்கள் இடத்தையும் நீங்கள் அழைக்கும் உங்களது தொலைபேசி எண்ணையும் சொல்லவும். நீங்கள் ஆங்கிலம் பேசாதவர் எனில் மொழிபெயர்ப்பாளர் வேண்டுமெனக் கேட்கவும். காவலர்கள் வரும்போது நீங்கள் இந்தப் பிரசுரத்தைக் காட்டி, நீங்கள் தவறுக நடத்தப்பட்டது குறித்து எடுத்துச் சொல்லவும்.

நீங்கள் ஏ-3, ஜி-5, ஹெச், ஜே, என்ஏடிஓ-7, அல்லது பி-1 உள்நாட்டு தொழிலாளர் குடியேறுவோர் அல்லாதோர் விசா பெற்றுல், உங்களது விசா நேர்காணலின்போது நீங்கள் இந்தப் பிரசுரத்தைப் பெறுவீர்கள். விசாவைப் பெறுவதற்கு முன்பாக துணைத்தூதரக அதிகாரி ஒருவர் நீங்கள் இந்த பிரசுரத்தைப் பெற்று, படித்து, இதன் உள்ளடக்கங்களைப் புரிந்துகொண்டுள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். நீங்கள் பெறவில்லையெனில், துணைத்தூதரக அதிகாரி பிரசுரத்தைக் கொடுத்து அது குறித்து உங்களிடம் விவாதிக்க வேண்டும். கூடுதலாக, பிரசுரத்திலுள்ள தகவல்கள் குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், துணைத்தூதரக அதிகாரி பதில் தர வேண்டும்.

**உதவிக் குறிப்பு: அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்கு இந்த பிரசுரத்தை எதிர்கால துணையாதாரமாக உங்களுடன் கொண்டுவரவும்.**

# விசா நிலை எதுவாயினும் உங்களது உரிமைகள்

உங்களது உரிமைகள் மீறப்படுவதாக நீங்கள் நம்பினுல், அரசாங்க நிறுவனம், தொழிற்சங்கம், அரசு-சாரா அமைப்பு, அல்லது உங்களுக்கு உதவக் கூடிய பிற நிறுவனங்களுக்குத் தெரிவியுங்கள். நீங்கள் ஆங்கிலம் பேசாதவர் எனில் மொழிபெயர்ப்பாளர் வேண்டுமெனக் கேட்கவும்.

## 1. நியாயமாக ஊதியமளிக்கப்படுவதற்கான உங்களது உரிமை

- நீங்கள் செய்யும் எல்லா வேலைகளுக்காகவும் ஊதியமளிக்கப்படுவதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.
- பெரும்பாலான வேலைகளுக்காக கூட்டரசின் மைய அமைப்புக்குரிய சட்டபூர்வமான குறைந்தபட்ச ஊதியமாவது பெறுவதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது. கூட்டரசின் மைய அமைப்புக்குரிய தற்போதைய குறைந்தபட்ச ஊதியத்தைத் தெரிந்துகொள்ள *www.dol.gov/whd/minimumwage.htm*ஐப் பார்வையிடவும்.
- பின்வருவனவற்றின்போது நீங்கள் கூட்டரசின் மைய அமைப்புக்குரிய குறைந்தபட்ச ஊதியத்தை விட அதிகமாக சம்பாதிக்கும் உரிமையுடையவராவீர்கள்:
  - அதிகமான குறைந்தபட்ச ஊதியம் கொண்ட ஒரு மாகாணம், நகரம் அல்லது நாட்டில் நீங்கள் பணிபுரிகிறீர்கள்.
  - உங்கள் வேலைவாய்ப்பு ஒப்பந்தம்/விசா செயல்நிரலுக்கு அதிகமான தொகையைக் கோருகிறது.
- ஒரு வாரத்தில் 40 மணி நேரத்துக்கு மேலாக நீங்கள் வேலை செய்துள்ள ஒவ்வொரு மணி நேரத்துக்கும் கூடுதல் நேர ஊதியமாக உங்களது மணிக்கான ஊதியத்தின் ஒன்றரை மடங்கு பெறுவதற்கு நீங்கள் உரிமையுடையவராகலாம். உதாரணமாக, உங்களது வழக்கமான ஊதிய விகிதம் மணிக்கு $10 எனில், ஒரே வாரத்தில் 40 மணி நேரத்துக்கு மேலாக நீங்கள் வேலை செய்துள்ள ஒவ்வொரு மணி நேரத்துக்கும் உங்கள் முதலாளி உங்களுக்கு $15 தர வேண்டியிருக்கும்.



**உதவிக் குறிப்பு: நீங்கள் எவ்வளவு காலத்துக்குத் தங்குகிறீர்கள் என்பதைப் பொறுத்து, அமெரிக்க ஐக்கிய அரசுகளில் உடல்நலக் காப்பீடு பெற நீங்கள் கோரப்படலாம். உடல்நலக் காப்பீட்டுக்கான செலவைக் குறைப்பதற்கான நிதியுதவிக்கும் நீங்கள் தகுதி பெறலாம்.**

- உங்களது ஊதிய காசோலையிலிருந்து உங்கள் முதலாளி பணத்தை எடுத்துக்கொண்டால், அது கழிவு எனப்படுகிறது. உங்களது ஊதிய காசோலையிலிருந்து எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு கழிவையும் உங்கள் முதலாளி உங்களுக்குத் தெளிவாக அடையாளப்படுத்த வேண்டும்.
- கழிவுகளுக்குப் பிறகு சட்டபூர்வமாகத் தேவைப்படும் ஊதிய விகிதத்தை விடக் குறைவான தொகையே உங்களுக்குக் கிடைத்தால், கழிவுகள் சட்ட விரோதமானதாக இருக்கலாம். சீருடைகள், பாதுகாப்பு சாதனங்கள், தேவையான உபகரணங்கள், தரவுப் பொருட்கள், சாதனங்கள் அல்லது பணியமர்த்துதலுக்கான செலவினங்களை முதலாளி பொதுவாகக் கழிப்பதில்லை. சில விசா நிலைகளுக்கு, இலவசமாக வீட்டு வசதி அளிக்கப்பட வேண்டும்.
- சட்டபூர்வமான கழிவுகள் என்பது, உடல்நலக் காப்பீடு, தொழிற்சங்க நிலுவைகள், அல்லது ஊதிய முன்பணத் தொகைகள் போன்ற நீங்கள் தேர்வு செய்கின்றவற்றையும் மற்றும் குழந்தை ஆதரவு அல்லது ஜீவனும்சம் அல்லது திவாலாவதற்கான நடவடிக்கைகளுக்கான நீதிமன்ற-ஆணையின்படி மேற்கொள்ளப்படும் பிடித்தங்கள் போன்ற முதலாளி செய்தாக வேண்டிய கழிவுகளையும் உள்ளடக்கியதாகும். சில விலக்குகளுடன், அமெரிக்க ஐக்கிய

உதவிக் குறிப்பு: அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்குக் கிளம்புவதற்கு முன்பு, புலம் பெயர்ந்த தொழிலாளர் அமைப்புகள் அல்லது முன்னாள் புலம் பெயர்ந்த தொழிலாளர்களிடம் அறிவுரை பெறுங்கள். அமெரிக்க ஐக்கிய அரசுகளில் நீங்கள் இருக்கும்போது உங்களுக்கு பிரச்சனைகளோ அல்லது கேள்விகளோ இருந்தால் நீங்கள் தொடர்புகொள்ளத் தக்க பெயர்களையும் எண்களையும் அவர்கள் உங்களுக்குத் தர முடியும்.

அரசுகளில் பணிபுரியும் குடியேறுவோர் அல்லாதோர் விசா கொண்டுள்ளவர்கள். கூட்டரசின் மைய அமைப்புக்குரிய மற்றும் மாகாண வருவாய் மற்றும் வேலைவாய்ப்பு வரிகளுக்கு உட்படுகிறார்கள். நீங்களும் உங்களது முதலாளியும் வருமான வரி நேரடியாக உங்களது ஊதிய காசோலையிலிருந்தே பிடித்தம் செய்யப்படுவதற்கு ஒப்புக்கொள்ளலாம். உங்களது முதலாளி பொதுவாக சமூகப் பாதுகாப்பு மற்றும் மருத்துவப் பராமரிப்பு வரிகள் உள்ளிட்ட வேலைவாய்ப்பு வரிகளை நேரடியாக உங்களது ஊதிய காசோலையிலிருந்தே பிடித்தம் செய்வார்.

## 2. பாரபட்சம் காட்டப்படாமல் இருப்பதற்கான உங்களது உரிமை

- உங்கள் வயது (நீங்கள் 40 அல்லது அதற்கு மேற்பட்டவராக இருந்தால்), பாலினம், இனம், நாடு சார்ந்த மூல முதலிடம், இனக் குழு, நிறம், மதம், மரபுவழி தகவல்கள் (குடும்ப மருத்துவப் பின்னணி), அல்லது உடற்குறைபாடு ஆகியவை காரணமாக உங்களது முதலாளி பணியில் உங்களை மாறுபட்ட முறையிலோ அல்லது மோசமாகவோ நடத்துவது சட்டவிரோதமானது.
- நீங்கள் பெண் என்பதாலோ, அல்லது நீங்கள் கர்ப்பமாக இருப்பதாலோ, தாய்ப்பாலூட்டிக்கொண்டிருப்பதாலோ அல்லது நீங்கள் கர்ப்பம் தரிக்கக் கூடும் என்பதாலோ, உங்களது முதலாளி உங்களை மாறுபட்ட முறையில் நடத்தக் கூடாது.



## 3. பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் அத்துமீறல் இல்லாமல் இருப்பதற்கான உங்களது உரிமை

- உங்களது முதலாளி உங்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவது சட்டவிரோதமானது. உங்களது முதலாளி அவமதிப்பான பாலியல் ரீதியான அல்லது பாலினம்-சார்ந்த கருத்துக்கள் ஏதும் சொல்லக் கூடாது.
- உங்களது முதலாளி உங்களிடம் பின்வருவன உள்ளிட்ட பாலியல் துன்புறுத்தல்கள் மேற்கொள்வது சட்டவிரோதமானது:
  - பாலியல் செயல் எதையும் செய்யச் சொல்லி உங்களிடம் கேட்பது;
  - பாலியல் ரீதியாக உங்களைத் தொடுவது;
  - ஏதேனும் பாலியல் செயல்களைச் செய்வதற்கு உங்களை வற்புறுத்துவது, தந்திரம் செய்வது அல்லது கட்டாயப்படுவது.

## 4. ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான பணியிடம் பெறுவதற்கான உங்களது உரிமை

நீங்கள் அமெரிக்க ஐக்கிய அரசுகளில் ஒரு பணியாளராக, நீங்கள் பின்வருவன உள்ளிட்ட பாதுகாப்பான, ஆரோக்கியமான பணிச் சூழலுக்கான உரிமை கொண்டுள்ளீர்கள்:

- **மருத்துவ சிகிச்சை**: வேலை-தொடர்பான காயங்கள் மற்றும் உடல்நலக் குறைபாடுகளை உங்கள் முதலாளிக்குத்



தெரிவிக்கும் உரிமை உங்களுக்கு உண்டு. பெரும்பாலான சமயங்களில், வேலை-தொடர்பான காயங்கள் மற்றும் உடல்நலக் குறைபாடுகளுக்கு உங்கள் முதலாளி இலவச மருத்துவ சிகிச்சையும் காயம்பட்ட சமயத்தில் நீங்கள் இழந்த ஊதியத்தின் ஒரு பகுதியையும் தர வேண்டும். நீங்கள் பணிபுரியும் மாகாணத்தில் பணியாளர்களின் ஊதிய இழப்பீட்டுக்காக நீங்கள் விண்ணப்பிக்க வேண்டியிருக்கலாம்.

- **பாதுகாப்புக்குரிய சாதனங்கள்**: நீங்கள் பூச்சிக்கொல்லி மருந்துகள் அல்லது அபாயகரமான வேதிப்பொருட்களுடன் அல்லது அவை சூழ பணிபுரிபவரானால், உங்களது முதலாளி அவ்வேலைக்கான பாதுகாப்புக்குரிய சாதனங்களுக்கான பணம் செலுத்தி (சுவாசக் கருவி அல்லது கையுறைகள் போன்ற) அவற்றை வழங்க வேண்டும்.
- **பயிற்சி**: ஆபத்துக்கள், தீங்குகளைத் தடுக்கும் முறைகள், மற்றும் உங்களது பணியிடத்துக்கு தகுந்த, பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய தரநிலைகளைப் பற்றி தகவல்கள் மற்றும் பயிற்சி பெறுவதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது. இப்பயிற்சியானது உங்களால் புரிந்துகொள்ளக் கூடிய மொழி மற்றும் வார்த்தைகளில் இருக்க வேண்டும்.
- **வீட்டு வசதி**: உங்களது முதலாளி வீட்டு வசதி அளிப்பதானால், அது சுத்தமானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்க வேண்டும். வேலை-இல்லாத நேரங்களில் உங்கள் வீட்டை விட்டு வெளிவர நீங்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.
- **குளியலறைகள்**: குளியலறைகள் சுத்தமானதாகவும் அணுகக் கூடியதாகவும் இருக்க வேண்டும். தேவைப்படும்போது குளியலறையைப் பயன்படுத்த உங்களது முதலாளி உங்களை அனுமதிக்க வேண்டும்.
- **குடிதண்ணீர்**: சுத்தமான குடிநீரைப் பெறும் உரிமை உங்களுக்கு உள்ளது.

உதவிக் குறிப்பு: உங்களது முதலாளி, ஒப்பந்ததாரர், அல்லது பணியமர்த்துபவரின் சட்ட ஆலோசனை பாரபட்சமானதாக இருக்கலாம். ஒரு சுயாதீனமான வழக்கறிஞரிடமிருந்து ஆலோசனை பெறவும்.

- **சோப் மற்றும் சுத்தமான நீர்**: தேவைப்படும்போது, குறிப்பாக பூச்சிக்கொல்லிகள்/வேதிப்பொருட்களால் பதப்படுத்தப்பட்ட காய்கறிகள் அல்லது பழங்கள் உள்ளிட்ட பூச்சிக்கொல்லிகள்/வேதிப்பொருட்களைக் கையாண்ட பின்பு, சோப் மற்றும் நீர் கொண்டு உங்கள் கைகளைக் கழுவும் உரிமை உங்களுக்கு உள்ளது.
- **மருத்துவ அவசரநிலைகள்**: உங்களது செலவுகளுக்கான தொகை உங்களுக்கு அளிக்கப்படலாம். அதனால் நீங்கள் உங்கள் காயங்கள் மற்றும் உடல்நலக் குறைபாடுகளை, உங்கள் முதலாளியிடம் அவர் தேவையான படிவங்களை நிரப்பும் வகையில், கூடிய விரைவில் தெரிவிக்க வேண்டும். நீங்கள் மருத்துவரிடமோ, தனி மருத்துவமனை அல்லது மருத்துவமனையிலோ இருக்கும்போது உங்கள் உடல்நலக் குறைபாடுகள் மற்றும் காயங்கள் குறித்த படிவங்களுக்கான நகல்களைக் கேளுங்கள்.

நீங்கள் பூச்சிக்கொல்லிகள் அல்லது வேதிப்பொருட்களுடனோ அல்லது அவை சார்ந்தோ பணிபுரிந்துகொண்டிருந்தால்:

- நீங்கள் எந்த வேதிப்பொருட்களுடன் பணிபுரிகிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் உங்களுக்கு உரிமை உண்டு. உங்களது முதலாளி பணியிட வேதிப்பொருட்கள் குறித்த ஊதியமளிக்கப்பட்ட பயிற்சியை உங்களுக்கு அளிக்க வேண்டும்.
- பூச்சிக்கொல்லிகள் எங்கு மற்றும் எப்போது தெளிக்கப்பட்டது மற்றும் பயன்படுத்தப்பட்ட பகுதிக்குள் மீண்டும் எப்போது பாதுகாப்பாக உள்நுழையலாம் என்பதை தற்செயலாக அதற்கு ஆட்படுவதைத் தவிர்ப்பதற்காக உங்களது முதலாளி உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்படும் பகுதிக்குள் இருக்க வேண்டாம்.

## 5. தொழிற்சங்கம், புலம்பெயர்ந்தோர் மற்றும் தொழிலாளர் உரிமைகளுக்கான குழுக்களிடமிருந்து உதவி பெறுவதற்கான உங்கள் உரிமை

- சில விதிவிலக்குகளுடன், உங்களது ஊதியம் அல்லது பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்காக உங்கள் சக பணியாளர்களுடன் இணைந்து முதலாளியைக் கேட்கும் உரிமை உங்களுக்கு உள்ளது. பெரும்பாலான தொழிலாளர்களுக்கு உங்கள் பணியிடத்தில் ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கி, இணைந்து, அதற்கு ஆதரவளிப்பதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.
- நீங்கள் வேலை செய்யாதபோது, அதிக ஊதியம் அல்லது பணியிடத்தில் மேம்பட்ட பணிச் சூழல்களுக்கு ஆதரவான பொது உரைகள், ஊர்வலங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் நீங்கள் பங்குகொள்ளலாம்.
- உங்களது குடியேற்ற நிலை எதுவாக இருந்தாலும், உங்களுக்கு இந்த உரிமை உள்ளது. உங்கள் உரிமையை வலியுறுத்துவதற்காக உங்கள் முதலாளி உங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள முடியாது.

## 6. தவறாகப் பயன்படுத்தும் பணிச் சூழலை விட்டு வெளியேறுவதற்கான உங்களது உரிமை

- தவருகப் பயன்படுத்தப்படும்போது மிகவும் முக்கியமான விஷயம் என்னவெனில் பாதுகாப்பை நாடுவதேயாகும். உங்கள் முதலாளி உங்களைத் தவருகப் பயன்படுத்தும்போது நீங்கள் பணியில் தொடர வேண்டியதில்லை.
- உங்களது முதலாளியிடமிருந்து நீங்கள் விலகியதும் உங்கள் விசா நிலை செல்லத் தக்கதாக இருக்காது என்ருலும், உங்களால் உங்கள் விசா நிலையை அல்லது முதலாளியை மாற்றிக்கொள்ள முடியும். அவ்வாறு செய்வதற்காக நீங்கள் அமெரிக்க ஐக்கிய அரசுகளை விட்டு வெளியேற வேண்டியிருக்கலாம். உங்கள் விசா நிலை செல்லத்தக்கதாக இல்லை என்ருலும், உங்களைத் தவருகப் பயன்படுத்தும் முதலாளியிடமிருந்து நீங்கள் விலகியதும் உங்களுக்கு உதவி கிட்டும்.



**உங்கள் முதலாளி உங்களுக்கு சரியான நேரத்தில் ஊதியமளிக்க வேண்டும். ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கும் ஒரு முறை பணியாளர்களுக்கு ஊதியம் அளிப்பது அமெரிக்க ஐக்கிய அரசுகளில் ஒரு பொதுவான நடைமுறையாகும்.**

- நீங்கள் பணிபுரியும்போதோ அல்லது உங்கள் முதலாளியிடமிருந்து விலகிய பிறகோ, நீங்கள் ஒரு முறையான புகார் அளிக்கலாம் அல்லது உங்கள் முதலாளிக்கு எதிராக ஓர் உரிமைக் கோரிக்கை வழக்கு தொடுக்கலாம். அவ்வாறு செய்தமைக்காக உங்கள் முதலாளி உங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் (அல்லது பழிவாங்கினுல்) அவர் சட்டத்தை மீறுவதாகும்.

## உங்களது குடியேறியோர் அல்லாத நிலை அடிப்படையிலான கூடுதல் உரிமைகள்

### ஏ-3, ஜி-5, என்ஏடிஓ-7, மற்றும் பி-1 உள்நாட்டுப் பணியாளர்கள்

- உங்கள் முதலாளி உங்களுக்கு அமெரிக்க ஐக்கிய அரசுகள் சட்டத்துக்கு இணக்கமான ஒரு பணியமர்த்துதல் ஒப்பந்தத்தை அளிக்க வேண்டும்.
- ஒப்பந்தமானது உள்நாட்டுப் பணியாளருக்கு அளிக்கப்பட வேண்டிய மணிக்கான குறைந்தபட்ச ஊதியத்தைக் குறிப்பிட வேண்டும். மணிக்கான ஊதியமானது, அமெரிக்க ஐக்கிய அரசுகளின் கூட்டரசின் மைய அமைப்புக்குரிய, மாகாண அல்லது உள்ளூர் சட்டத்தின்கீழான குறைந்தபட்ச ஊதியத்தை

விட மிக அதிகமானதாக இருக்க வேண்டும்.

- முதலாளிகள் நீங்கள் புரிந்துகொள்ளும் மொழியிலான ஒப்பந்தத்தை உங்களுக்கு அளிக்க வேண்டும். ஒப்பந்தத்தின் வரையறைகளை நீங்கள் தெரிந்துகொள்வதை உறுதி செய்துகொள்ளுங்கள். ஓர் ஆவணம் என்ன சொல்கிறது என்பது உங்களுக்குத் தெரியாவிட்டால் அதில் கையொப்பம் இடாதீர்கள்.

## ஏ-3, ஜி-5, மற்றும் என்ஏடிஓ-7 உள்நாட்டுப் பணியாளர்களுக்கான கூடுதல் தேவைகள்

குறைந்தபட்சமாக, ஒப்பந்தமானது பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்:

- அமெரிக்க ஐக்கிய அரசுகளின் எல்லா சட்டங்களையும் பின்பற்றுவதாக உங்கள் முதலாளி ஒப்புக்கொள்ளுதல்;
- பணம் செலுத்துதலுக்கான கால இடைவெளி மற்றும் வடிவம், பணிக் கடமைகள், வாராந்திர வேலை நேரங்கள், பண்டிகை நாட்கள், நோய்வாய்ப்பட்ட நாட்கள், விடுமுறைக் காலம் ஆகியவை குறித்த தகவல்கள்; மற்றும்
- உங்கள் பாஸ்போர்ட், பணியமர்த்துதல் ஒப்பந்தம், அல்லது பிற தனிப்பட்ட உடைமைகளை வைத்துக்கொள்ளாதிருக்க உங்கள் முதலாளி ஒப்புக்கொள்ளுதல்.

## ஹெச்-2ஏ தற்காலிக விவசாயப் பணியாளர் விசாக்கள்

- தொழிலாளர் ஆள் சேர்ப்பவருக்கு நீங்கள் ஒருபோதும் கட்டணம் செலுத்த வேண்டியிருக்காது.
- நீங்கள் புரிந்துகொள்ளும் ஒரு மொழியில் எழுத்துபூர்வமான பணி ஒப்பந்தத்தை நீங்கள் பெற்றாக வேண்டும். ஊதியம், பணிக் கால அளவு, நேரங்கள், நன்மைகள் (போக்குவரத்து, வீட்டு வசதி மற்றும் உணவு அல்லது சமையல் வசதிகள் ஆகியவை உட்பட), உங்கள் ஊதிய காசோலையிலிருந்து மேற்கொள்ளப்படும் ஏதேனும் கழிவுகள் ஆகியவை குறித்த விவரமான தகவல்கள் ஆகியவற்றை அது கொண்டிருக்க வேண்டும்.

- எண்ணிக்கை விகித அடிப்படையில் உங்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டாலும், நியாயமாக ஊதியமளிக்கப்படுவதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது.
- நீங்கள் கிளம்பி வரும் இடத்திலிருந்து பணியிடம் வரைக்குமான உள்வரும் போக்குவரத்து மற்றும் தினசரி பிழைப்பூதியத்தை உங்கள் முதலாளி வழங்க வேண்டும், அல்லது பணி ஒப்பந்தத்தில் பாதியை நீங்கள் நிறைவு செய்தவுடன், நியாயமான செலவுகளுக்கு ஈடாகத் திருப்பிச் செலுத்த வேண்டும். பணி ஒப்பந்தத்தை நீங்கள் நிறைவு செய்தவுடன், பணியிடத்திலிருந்து முதலாளிக்காக நீங்கள் எங்கிருந்து கிளம்பி வந்தீர்களோ, அந்த இடம் வரைக்கும் நீங்கள் திரும்பிச் செல்வதற்கான போக்குவரத்து மற்றும் தினசரி பிழைப்பூதியத்துக்கு உங்கள் முதலாளி ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது பணம் தர வேண்டும். உங்கள் பணி ஊதியத்திலிருந்து செலவுகளைக் கழித்தால் வரும் தொகை, அமெரிக்க ஐக்கிய அரசுகளின் குறைந்தபட்ச ஊதியத்தை விடக் குறைவாக இருக்கும் பட்சத்தில், உங்கள் முதலாளி முதல் வேலை வாரத்தில் உள்வரும் போக்குவரத்து மற்றும் விசா செலவுகள் ஆகியவற்றுக்கு ஈடாகத் திருப்பிச் செலுத்துவது அவசியமாகலாம். முதலாளி-அளித்த வீட்டு வசதியிலிருந்து பணித் தளத்திற்கு கட்டணம் ஏதுமில்லாமல் போக்குவரத்தும் உங்கள் முதலாளி வழங்க வேண்டும்.
- உங்கள் ஹெச்-2ஏ விசா தொடர்பாக செயல்படுத்தப்பட்ட சேவைகளுக்காக அளிக்கப்பட்ட இழப்பீட்டுக்கான, அமெரிக்க ஐக்கிய அரசுகளின் சமூகப் பாதுகாப்பு மற்றும் மருத்துவப் பராமரிப்பு வரிகளிலிருந்து உங்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது.
- பொதுவாக, உங்கள் முதலாளி ஒப்பந்த காலகட்டத்திலுள்ள வேலை நாட்களில் குறைந்தபட்சம் ¾ பங்கு அளவிலான வேலை நாட்களுக்கு சமமான மொத்த மணி நேரங்களுக்கு பணி வழங்க வேண்டும்.

## ஹெச்-2பி தற்காலிக விவசாயம்-அல்லாத பணியாளர் விசாக்கள்

- தொழிலாளர் ஆள் சேர்ப்பவருக்கு நீங்கள் ஒருபோதும் கட்டணம் செலுத்த வேண்டியிருக்காது.
- நீங்கள் புரிந்துகொள்ளும் ஒரு மொழியில் எழுத்துபூர்வமான பணி ஒப்பந்தத்தை நீங்கள் பெற்றுக வேண்டும். ஊதியம், பணிக்கால அளவு, நேரங்கள், நன்மைகள் (போக்குவரத்து, வீட்டு வசதி மற்றும் உணவு அல்லது சமையல் வசதிகள் ஆகியவை உட்பட), உங்கள் ஊதிய காசோலையிலிருந்து ஏதேனும் கழிவுகள் ஆகியவை குறித்த விவரமான தகவல்கள் ஆகியவற்றை அது கொண்டிருக்க வேண்டும்.
- பொதுவாக, உங்கள் முதலாளி ஒவ்வொரு 12-வார காலகட்டத்திலுமுள்ள வேலை நாட்களில் குறைந்தபட்சம் ¾ பங்கு அளவிலான வேலை நாட்களுக்கு சமமான மொத்த மணி நேரங்களுக்கு பணி வழங்க வேண்டும்.
- எண்ணிக்கை விகித அடிப்படையில் உங்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டாலும், நியாயமாக ஊதியமளிக்கப்படுவதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது.
- பணி ஒப்பந்தத்தில் பாதியை நீங்கள் நிறைவு செய்தவுடன், வெளிநாட்டிலிருந்து உங்களது உள்வரும் போக்குவரத்து மற்றும் பிழைப்பூதியத்தை உங்கள் முதலாளி வழங்க வேண்டும், அல்லது செலவுகளுக்கு ஈடாகத் திருப்பிச் செலுத்த வேண்டும். கூடுதலாக, பணி ஒப்பந்தத்தை நீங்கள் நிறைவு செய்தாலோ, அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பணி நியமனக் காலகட்டத்துக்கு முன்னதாகவே ஏதேனும் காரணங்களால் உங்கள் முதலாளியால் நீங்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டாலோ, நீங்கள் வீடு திரும்பிச் செல்வதற்கான போக்குவரத்துக்கு ஆகும் செலவுகளுக்கு, பிழைப்பூதியம் உட்பட, உங்கள் முதலாளி ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது பணம் தர வேண்டும். உங்கள் பணி ஊதியத்திலிருந்து செலவுகளைக் கழித்தால் வரும் தொகை, அமெரிக்க ஐக்கிய அரசுகளின் குறைந்தபட்ச ஊதியத்தை விடக் குறைவாக இருக்கும் பட்சத்தில், உங்கள் முதலாளி முதல் வேலை வாரத்தில் உள்வரும் போக்குவரத்து மற்றும் விசா

செலவுகள் ஆகியவற்றுக்கு ஈடாகத் திருப்பிச் செலுத்துவது அவசியமாகலாம்.

## ஜே-1 பரிமாற்ற வருகையாளர் விசாக்கள்

- உங்களது ஒப்புதலளிக்கப்பட்ட டிஎஸ்-2019, உங்கள் செயல்நிரல் தேதிகள், பரிமாற்றத்தின் வகையினம், உங்களது பொறுப்பாதரவாளரின் பெயர், மற்றும் உங்கள் பரிமாற்ற செயல்நிரல் நிகழும் இடமளிக்கும் இடம் ஆகியவற்றை விவரிக்கிறது.
- உங்களது பொறுப்பாதரவாளர் உங்கள் பரிமாற்ற செயல்நிரலுக்கான செலவுகள், நிபந்தனைகள் மற்றும் வரையறைகளைத் துல்லியமாக விவரிக்க வேண்டும்.

## கோடைக்கால பணி பயணம்

- முன்பே-ஏற்பாடு செய்யப்பட்ட வேலைவாய்ப்பு உங்களிடம் இல்லையென்றால், நீங்கள் அமெரிக்க ஐக்கிய அரசுகளை வந்தடைந்ததும் உங்களுக்கு வேலை கிடைப்பதற்கு உங்கள் பொறுப்பாதரவாளர் உங்களுக்கு உதவ வேண்டும்.

## பயிற்சிப் பணியாளர் அல்லது பயிற்சி பெறுபவர்

- உங்கள் பொறுப்பாதரவாளர் உங்களை நேரடியாகவோ தொலைபேசி மூலமாகவோ அல்லது வெப் கேமரா மூலமாகவோ நேர்காணல் செய்ய வேண்டும்.
- உங்கள் பொறுப்பாதரவாளர், நீங்கள் பெறவிருக்கும் ஏதேனும் வருமானத்தின் எழுத்துபூர்வ அறிக்கை மற்றும் திட்டத்தின் பயிற்சி நோக்கங்களின் ஒரு தொகுப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய, ஒரு பயிற்சிப் பணியாளர் அல்லது பயிற்சி பெறுபவர் பணியமர்த்துதல் திட்டத்தை (டிஎஸ்-7002) உங்களுக்கு அளிக்க வேண்டும். வாரத்திற்கு குறைந்தபட்சம் 32 மணி நேரமாவது உங்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.
- உங்கள் பொறுப்பாதரவாளர் நீங்கள் செலுத்த வேண்டிய செலவுகள் மற்றும் கட்டணங்கள் மற்றும் அமெரிக்க ஐக்கிய அரசுகளில் வாழ்வதற்கான செலவினங்களுக்கான ஒரு மதிப்பீடு ஆகியவற்றுக்கான எழுத்துபூர்வ அறிக்கையை உங்களுக்கு அளிக்க வேண்டும்.



- நீங்கள் மருத்துவக் காப்பீட்டு பாதுகாப்பு கொண்டிருப்பதை, உங்கள் பொறுப்பாதரவாளர் இக்காப்பீட்டை அளிக்கவோ அல்லது அதற்கு பணம் செலுத்தவோ வேண்டியதில்லை என்றாலும் கூட, உங்கள் பொறுப்பாதரவாளர் உறுதி செய்ய வேண்டும்.

## உபகாரம் பெறும் பணிப்பெண்

- உங்களுக்கு இடமளிக்கும்-குடும்பம் உயர்நிலைக்கு மேற்பட்ட அமைப்பிலுள்ள வகுப்பில் பங்குகொள்ள உங்களைச் சேர்த்து, அவ்வகுப்புகளுக்காக $500 வரையிலான தொகையை அளிக்க வேண்டும்.
- ஒரு நாளைக்கு 10 மணி நேரத்துக்கோ அல்லது ஒரு வாரத்துக்கு 45 மணி நேரத்திற்கோ அதிகமாக நீங்கள் வேலை செய்ய வேண்டியதில்லை.
- உங்கள் ஆலோசகர் தொடர்ந்து உங்களுடனும் உங்களுக்கு இடமளிக்கும்-குடும்பத்துடனும் தொடர்பில் இருக்க வேண்டும்.

**உதவிக் குறிப்பு: நீங்கள் பயணம் செய்வதற்கு முன்பு, எல்லா முக்கிய ஆவணங்களுக்கும், குறிப்பாக உங்கள் பாஸ்போர்ட் மற்றும் அமெரிக்க ஐக்கிய அரசுகள் விசா, உங்கள் பணி ஒப்பந்தம், மற்றும் ஏதேனும் கூடுதல் அடையாள ஆவணங்கள் ஆகியவற்றுக்கு இரண்டு நகல்கள் எடுத்துக்கொள்ளவும். இந்த நகல்களின் ஒரு தொகுப்பை உங்கள் சொந்த நாட்டில் நீங்கள் நம்புகிற ஒருவரிடம் கொடுக்கவும். மற்றொரு தொகுப்பை நீங்கள் எடுத்துக்கொள்ளவும்.**

உங்கள் பெயர்

குடும்பப் பெயர்

உங்கள் விசா அளிக்கப்பட்ட இடம்

உங்கள் பிறந்த தேதி

“ஆர்” என்பது “வழக்கமான” பாஸ்போர்ட். “வகுப்பு” என்பது விசாவின் வகை.




“காலாவதி தேதி” என்பது நீங்கள் அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்குள் நுழைய நாடுவதற்கு உங்கள் விசாவைப் பயன்படுத்தக் கூடிய கடைசி நாளாகும். அதற்கும் நீங்கள் எவ்வளவு காலம் அமெரிக்க ஐக்கிய அரசுகளில் தங்குவீர்கள் என்பதற்கும் எந்த சம்பந்தமுமில்லை.

“எம்” என்பது நீங்கள் அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்குள் பல முறை நுழைவதற்கு நாடலாம். இங்கு ஏதேனும் எண் இருந்தால், அத்தனை முறை நீங்கள் நுழைவுக்கு விண்ணப்பிக்கலாம்.

“சிறு குறிப்பு” என்பது உங்கள் விசா குறித்த கூடுதல் தகவல்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். உதாரணமாக, ஒரு மாணவர் விசாவில், உங்கள் எஸ்இவிஐஎஸ் எண்ணையும் உங்களது பள்ளியின் பெயரையும் காட்ட.

# உங்கள் குடியேறுவோர் அல்லாதோர் விசா

குடியேறுவோர் அல்லாதோர் விசாவானது வேலை, படிப்பு, அல்லது ஒரு கலாசாரப் பரிமாற்ற நிகழ்ச்சியில் பங்குபெறுதல் போன்றவை உள்ளிட்ட குறிப்பிட்ட காரணங்களுக்காக அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் தனிநபர்களை அனுமதிக்கும் அமெரிக்க ஐக்கிய அரசுகளின் ஓர் ஆவணமாகும். வெளிநாடுகளிலுள்ள தூதரகம் அல்லது துணைத் தூதரகத்தில் நீங்கள் விசாவுக்காக விண்ணப்பிக்க வேண்டும். நீங்கள் குடியேறுவோர் அல்லாதோர் விசாவைப் பெற்றதும், அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்குப் பயணம் செய்து அனுமதிக்காக அமெரிக்க ஐக்கிய அரசுகள் அலுவலரிடம் விசாவைக் காண்பிக்க வேண்டும். உங்கள் விசா காலாவதியானல், நீங்கள் அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்குள் மீண்டும் நுழைவதற்கு முன்பாக புதிய விசாவைப் பெறுவது அவசியம்.




அமெரிக்க ஐக்கிய அரசுகளுக்குள் நீங்கள் அனுமதிக்கப்படும்போது, ஒரு குடியேற்ற அதிகாரி உங்கள் பாஸ்போர்ட்டை முத்திரையிட்டு, அனுமதிக்கப்படும் நாள், அனுமதிக்கப்படும் வகுப்பு மற்றும் “என்று வரை அனுமதிக்கப்படலாம்” என்பதைக் குறிப்பிடுவார். சட்டபூர்வ அந்தஸ்தில் நீங்கள் தொடர விரும்பினால், அமெரிக்க ஐக்கிய அரசுகள் குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவைகளிடம் நீட்டிப்பிற்காக விண்ணப்பிக்காதிருந்தால், உங்களது I-94 “என்று வரை அனுமதிக்கப்படலாம்” தேதிக்குள் அமெரிக்க ஐக்கிய அரசுகளை விட்டு வெளியேற வேண்டும். நீங்கள் *https://i94.cbp.dhs.gov*ல் உங்களது I-94 பதிவுக் குறிப்புகளைப் பார்வையிடலாம்.

## மனிதக் கடத்தல்

மனிதக் கடத்தலில் பாதிப்படைந்தவர்கள் பாதுகாப்புக்கும் சேவைகளுக்கும் உரிமை கொண்டவர்கள் மற்றும் சில பொது அனுகூலங்களுக்கும் தகுதியுடையவர்கள் ஆவார்கள். மனிதக் கடத்தல் என்பது வற்புறுத்துதல், ஏமாற்றுதல், அல்லது கட்டாயப்படுத்துதல் ஆகியவை மூலமாக வணிக ரீதியான பாலியல் தொழிலுக்காக குழந்தைகளை அத்துமீறி ஈடுபடுத்துதல் மற்றும் வணிக ரீதியான பாலியல் தொழிலுக்காக வயது வந்தவர்களை அத்துமீறி ஈடுபடுத்துதல் ஆகியவற்றுடன் கட்டாய உடலுழைப்புக்காக எந்த தனிநபரையும் பயன்படுத்தும் குற்றமாகும். தொழிலாளர் கடத்தலில் ஈடுபடுபவர்கள், விபச்சார தரகர்கள், வணிக ரீதியான பாலியல் சேவை பெறுபவர்கள் போன்ற இத்தகைய அத்துமீறல்களைச் செய்பவர்கள், கூட்டரசின் மைய அரசுக்குரிய மற்றும் மாகாணம் சார்ந்த கடத்தலுக்கு எதிரான சட்டங்களால் தண்டிக்கப்படலாம். தொழிலாளர் கடத்தலில் ஈடுபடுபவர்கள் மற்றும் பாலியல் கடத்தலில் ஈடுபடுபவர்கள், குற்றவியல் ரீதியாக தண்டிக்கப்படுவதுடன் சமூகக் கடமைப்பொறுப்புகளையும் எதிர்கொள்ள நேரலாம். பின்வருவன மனிதக் கடத்தலை சுட்டிக்காட்டும் சில எச்சரிக்கை அறிகுறிகளாகும்.

உதவிக் குறிப்பு: நீங்கள் அமெரிக்க ஐக்கிய அரசுகளை வந்தடையும்போது, உங்கள் பாஸ்போர்ட் மற்றும் பிற பயண ஆவணங்களை நீங்கள் எல்லா சமயங்களிலும் அணுகக் கூடிய ஒரு பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கவும். உங்கள் முதலாளி உங்கள் பாஸ்போர்ட்டை எடுத்துக்கொள்வது சட்டவிரோதமாகும்.

## அச்சுறுத்தல்களும் பயங்களும்

மனிதக் கடத்தலில் ஈடுபடுபவர்கள், மற்றும் அவர்களுக்கு உதவி செய்பவர்கள், உங்களையும் மற்றவர்களையும், விட்டுச் செல்ல முயல்வதற்கு மிகவும் பயப்படும் அளவுக்கு மிரட்டல்களையும் பிற பயமுறுத்தும் செயல்களையும் செய்யலாம். உதாரணமாக:

- அடித்தல், உடல் ரீதியாகத் தவறுகப் பயன்படுத்துதல், அல்லது பாலியல் ரீதியாகத் தவறுகப் பயன்படுத்துதல்;
- அடிப்பதாக, உடல் ரீதியாகத் தவறுகப் பயன்படுத்துவதாக, அல்லது பாலியல் ரீதியாகத் தவறுகப் பயன்படுத்துவதாக மிரட்டுதல்;
- அடிப்பதாக, உடல் ரீதியாகத் தவறுகப் பயன்படுத்துவதாக, அல்லது பாலியல் ரீதியாகத் தவறுகப் பயன்படுத்துவதாக மிரட்டுதல்;
- உள்ளே பூட்டி வைத்தல் அல்லது பணியிடம் அல்லது வீட்டை விட்டு ஒரு பணியாளர் வெளியேறுமல் தடுத்தல்;
- நீங்கள் வெளியேற முயன்றுலோ, அல்லது தவறுக நடத்துவதாக புகாரளித்தாலோ, அதிகாரிகளிடத்தில் சூழ்நிலையைத் தெரிவித்தாலோ, அல்லது உதவி நாடினுலோ, தீங்கு விளைவிப்பதாக உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் மிரட்டுதல்;
- உதவி நாடினுல் நீங்கள் நாடுகடத்தப்படலாம் அல்லது கைது செய்யப்படலாம் என்று மிரட்டுதல்; அல்லது
- வெளியேற முயன்ற, புகாரளித்த, சூழ்நிலையைத் தெரிவித்த, அல்லது உதவி நாடிய மற்ற தொழிலாளர்களை மிரட்டுதல் அல்லது அவர்களுக்குத் தீங்கு செய்தல்; அல்லது தப்பிக்க முயலும் யாரும் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டு திரும்பக் கொண்டுவரப்படுவார்கள் என்று மிரட்டுதல்.

## கடன்

மனிதக் கடத்தலில் ஈடுபடுபவர்கள், மற்றும் அவர்களுக்கு உதவி செய்பவர்கள், ஒரு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக நீங்கள் உடலுழைப்பு, சேவைகள் அல்லது வணிக ரீதியான பாலியல் செயல்களை (விபச்சாரம்) செய்யுமாறு வற்புறுத்துவார்கள். சில சந்தர்ப்பங்களில் அக்கடனுனது மனிதக் கடத்தலில் ஈடுபடுபவர்களால் உருவாக்கப்பட்டு சுமத்தப்படுகிறது. உடலுழைப்பு, சேவைகள் அல்லது வணிக ரீதியான பாலியல் செயல்களை (விபச்சாரம்) செய்ய வற்புறுத்துவதோ, அல்லது வெளியேற விடாமல் உங்களைத் தடுப்பதோ சட்டத்துக்குப் புறம்பானது. மனிதக் கடத்தலில் ஈடுபடுபவர்கள் உங்கள் கடனை உங்களால் திருப்பிச் செலுத்த முடியாத அளவுக்குக் கையாண்டு, கடன் திருப்பிச் செலுத்தப்படும் வரையில் நீங்கள் அந்த மனிதக் கடத்தலில் ஈடுபடுபவர்களின் சேவையில் நீடித்திருக்க வேண்டும் என்று உங்களை நம்ப வைப்பார்கள். கையாளப்படும் கடன்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியவை:

- கடினமான அல்லது ஒரு நியாயமான காலகட்டத்துக்குள் திருப்பிச் செலுத்த முடியாத, மற்றும் நீங்கள் சம்பாதிக்கும் தொகையுடனுன விகிதாச்சாரத்தை மீறிய கடனைச் சுமத்துதல்;
- நீங்கள் முன்கூட்டி ஒப்புக்கொள்ளாத அல்லது ஒப்புக்கொண்ட கடனுக்கும் அதிகமான கடனைச் சுமத்துதல்;
- கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக உங்கள் சம்பாத்தியத்தை பயன்படுத்த மறுத்தல்;
- உங்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக நீங்கள் மனிதக் கடத்தலில் ஈடுபடுபவர்களின் சேவையில் எவ்வளவு காலம் நீடித்திருக்க வேண்டும் என்பதை வரையறுக்க மறுத்தல்;
- நீங்கள் முன்கூட்டி ஒப்புக்கொள்ளாத கடனுடன் போக்குவரத்து கட்டணம், வீட்டு வசதி, உணவுக்கான கட்டணங்களை சேர்த்தல்; மற்றும்
- விதிகளை மீறுதல், போதுமான அளவு சம்பாதிக்காமலிருத்தல், அல்லது போதுமான அளவு உடலுழைப்பு, சேவைகள் அல்லது வணிக ரீதியான பாலியல் செயல்களை செய்யாமலிருத்தல் ஆகியவற்றுக்காக கட்டணங்கள், அபராதங்கள் அல்லது தண்டனைத் தொகைகளை சேர்த்தல்.

உதவிக் குறிப்பு: உங்கள் முதலாளி உங்களுக்கு எதிராகத் தெரிவிக்கும் முறையற்ற கருத்து மற்றும்/அல்லது செயலின் விவரமான பதிவுக் குறிப்பை வைத்திருக்கவும். எந்த சாட்சிகளின் பெயர்களையும் தொலைபேசி எண்களையும் எழுதி வைக்கவும்.

## விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள்

மனிதக் கடத்தலில் ஈடுபடுபவர்கள், மற்றும் அவர்களுக்கு உதவி செய்பவர்கள், நீங்கள் வெளியேறுதல், புகாரளித்தல், அல்லது உதவி நாடுதலை இன்னும் கடினமாக்கும் விதிகளையும் கட்டுப்பாடுகளையும் பயன்படுத்தலாம். உதாரணமாக:

- பணியிடத்தை விட்டு வெளியேறுவதற்கு எதிரான, மற்றும் வேலை செய்யாதபோது நீங்கள் எங்கு செல்லலாம் என்பதற்கான கண்டிப்பான விதிகள்;
- உங்களது சொந்த பாஸ்போர்ட், விசா, பிறப்புச் சான்றிதழ் அல்லது மற்ற அடையாளப்படுத்தும் ஆவணங்களை வைத்திருப்பதற்கு எதிரான விதிகள்;
- போதுமான உணவு, உறக்கம், அல்லது மருத்துவப் பராமரிப்பு பெறுவதை மறுத்தல்; அல்லது
- உங்கள் குடும்பம், மற்ற தொழிலாளர்கள், வாடிக்கையாளர்கள், அல்லது பணியிடத்துக்கு வெளியிலுள்ள சட்ட ரீதியான அல்லது சமூக சேவைக்கென நாடிவரும் பணியாளர்கள் போன்ற மற்ற நபர்களுடன் தொடர்புகொள்வதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது கண்காணித்தல்.

## ஏமாற்றுதல் மற்றும் பொய்கள்

மனிதக் கடத்தலில் ஈடுபடுபவர்கள், மற்றும் அவர்களுக்கு உதவி செய்பவர்கள், ஏமாற்றுவதையும் பொய்களையும் பயன்படுத்தலாம். உதாரணமாக:

- வேலையின் வகை, வேலை நேரங்கள், பணி அல்லது வசிக்கும் சூழ்நிலைகள், அல்லது ஊதியம் குறித்து தவறான வாக்குறுதிகள்;
- நல்ல வேலைக்கான வாக்குறுதி அளித்து, பின்பு உங்களைக் குறிப்பிடத்தக்க அளவில் நீண்ட நேரம் கடினமான சூழ்நிலைகளில், அல்லது வாக்குறுதியளித்ததை விட மிகக் குறைந்த ஊதியத்துக்காகப் பணிபுரிய வைத்தல்; அல்லது

- நல்ல வேலைக்கான வாக்குறுதி அளித்து, பின்பு உங்களை வேறு வகையான வேலை, சேவைகள், அல்லது வணிக ரீதியான பாலியல் செயல்களைச் செய்ய வைத்தல்; ஒரு செவிலியர் பேராசிரியர் பணிக்கான வாக்குறுதி அளித்து, பின்பு உங்களை ஒரு மருத்துவமனையில் செவிலியராகப் பணிபுரிய வற்புறுத்துதல், அல்லது ஒரு தாதி பணிக்கான வாக்குறுதி அளித்து, பின்பு உங்களை கவர்ச்சியாக நடனமாடவோ அல்லது வணிக ரீதியான பாலியல் செயல்களைச் (விபச்சாரம்) செய்யவோ வற்புறுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்.
- உங்களுக்கு உரிமைகள் ஏதும் இல்லை என்று உங்களிடம் சொல்லுதல்;
- நீங்கள் உதவி பெற முயன்றால் உங்களை நம்ப மாட்டார்கள் அல்லது நீங்கள் நாடு கடத்தப்படுவீர்கள் என்று உங்களிடம் சொல்லுதல்; அல்லது
- மனிதக் கடத்தலில் ஈடுபடுபவரின் அடையாளம் குறித்து பொய் சொல்ல அறிவுறுத்துதல்.

## தவறாக நடத்தப்பட்டதைத் தெரிவித்தால் நீங்கள் நாடு கடத்தப்படுவீர்களா?

தவறாக நடத்தப்பட்டதைத் தெரிவிப்பவர்களைப் பாதுகாக்கும் திட்டங்கள் உள்ளன. உங்களுக்கு குடியேற்ற ரீதியான பிரச்சனைகள் இருந்தாலும், நீங்கள் உதவி பெறுவதற்கு பயப்படக் கூடாது. உங்கள் முதலாளியிடம் வேலை செய்யாத ஒரு குடியேற்ற வழக்கறிஞரை நீங்கள் அணுக வேண்டும்.

நீங்கள் மனிதக் கடத்தல், அல்லது பாலியல் பலாத்காரம் அல்லது பாலியல் தாக்குதல் உள்ளிட்ட பிற கடுமையான குற்றங்களால் பாதிக்கப்பட்டவர் என்று நீங்கள் நம்பினால் நீங்கள் ஒரு மாறுபட்ட, “டி” (மனிதக் கடத்தலில் பாதிக்கப்பட்டவர்கள்) அல்லது “யு” (மனிதக் கடத்தல் அல்லது பிற கடுமையான குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள்) போன்ற குடியேறுவோர் அல்லாத நிலைக்குத் தகுதி பெறலாம். அல்லது அமெரிக்க ஐக்கிய அரசுகளில் தற்காலிகமாகத் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்படலாம். குடியேறுவோர் அல்லாதவர்கள் வகைப்படுத்தல் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கவே ஏற்படுத்தப்பட்டது.

அமெரிக்க ஐக்கிய அரசுகளில் உள்ள பலருக்கும் “டி” அல்லது “யு” போன்ற குடியேறுவோர் அல்லாத நிலைகள் குறித்துப் பரிச்சயமில்லை. உங்களுக்கு உதவுபவர்களிடம் நீங்கள் இவை குறித்து எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கலாம்.

## மனிதக் கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன சேவைகள் உள்ளன?

- அமெரிக்க ஐக்கிய அரசுகளில் மனிதக் கடத்தலில் பாதிக்கப்பட்டவர்கள் கூட்டரசு சார்ந்த அல்லது மாகாண திட்டங்களின்கீழ் நன்மைகள், சேவைகள் மற்றும் குடியேற்ற நிவாரணத்துக்கான தகுதி பெறலாம். மருத்துவ/பல் பராமரிப்பு, மன நலம் பேணுதல், வீட்டு வசதி, குடியேற்றுக்கான சட்ட ரீதியான உதவி, மற்றும் பிற சட்ட ரீதியான தேவைகள், வேலைவாய்ப்பு உதவி, மற்றும் பொது நன்மைகள் ஆகியவை உள்ளிட்ட இச்சேவைகளைப் பெறுவதற்கு பல்வேறு அமைப்புகள் உங்களுக்கு உதவலாம்.

உதவிக் குறிப்பு: நீங்கள் வேலை செய்யும் எல்லா நேரத்திற்கும் எழுத்துபூர்வமான பதிவு வைத்திருப்பது நல்ல யோசனையாகும். ஒரு நோட்டுப் புத்தகத்தை வாங்கி நீங்கள் வேலை செய்யும் எல்லா நாட்கள் மற்றும் மணி நேரங்கள், நீங்கள் எவ்வளவு ஊதியமளிக்கப்பட்டீர்கள், நீங்கள் ஊதியம் பெற்ற தேதிகள், உங்கள் ஊதிய காசோலையிலிருந்து செய்யப்பட்ட கழிவுகள் ஏதேனும், மற்றும் கழிவுகளுக்கான காரணங்கள் ஆகியவற்றை எழுதி வைக்கவும்.

## மாதிரி வாராந்திர வேலை விவரக் குறிப்பேடு

| முதலாளி: | மேற்பார்வையாளர்: |
|---|---|

| தேதி | செயல்பாடுகள் | நேரம் | கட்டணம் |
|---|---|---|---|
| | | உள்ளே: ______<br>வெளியே: ______<br>மொத்தம்: ______ | |
| | | உள்ளே: ______<br>வெளியே: ______<br>மொத்தம்: ______ | |

## பின்வருவன பற்றிய கூடுதல் விவரங்களுக்கு இந்த இணையதளங்களைப் பார்வையிடவும்:

இணையதளங்கள் ஆங்கிலத்தில் உள்ளன.

- விசா விண்ணப்ப நடைமுறை மற்றும் உங்களது அமெரிக்க ஐக்கிய அரசுகள் விசா: *usvisas.state.gov.*
- மனிதக் கடத்தல்: *www.state.gov/j/tip.*
- ஜே-1 விசா பரிமாற்ற செயல்திரல்: *j1visa.state.gov.*
- சமத்துவம் மற்றும் உங்கள் வயது, பாலினம், இனம், நாடு சார்ந்த மூல முதலிடம், நிறம், மதம், மரபுவழி தகவல்கள் (குடும்ப மருத்துவப் பின்னணி), அல்லது உடற்குறைபாடு ஆகியவை காரணமாகப் பணியில் பாரபட்சமில்லாமல் இருப்பதற்கும் பாரபட்சம் காட்டுவதற்காகப் புகாரளிப்பதற்குமான உங்களது உரிமை: *www.eeoc.gov.*
- உங்களது பணியிட பாதுகாப்பு உரிமைகள், அல்லது உங்கள் வேலை பாதுகாப்பு இல்லாமல் இருப்பதாக நீங்கள் நினைத்தால், ஓர் ஆய்வுக்கான நீங்கள் விரும்புதல்: *www.osha.gov.*
- உங்கள் முதலாளியிடமிருந்து அளிக்கப்படாத ஊதியத்தைப் பெறுவது எப்படி: *webapps.dol.gov/wow.*
- நியாயமாக ஊதியமளிக்கப்படுவதற்கான உங்களது உரிமைகள், ஊதிய புகார் அளிப்பது எப்படி என்பது உட்பட: *www.dol.gov/WHD/immigration.*
- உங்களது குடியுரிமை நிலை காரணமாக நீங்கள் பாரபட்சமாக நடத்தப்படாமல் இருப்பதற்கும், பாரபட்சத்துக்காகப் புகாரளிப்பதற்குமான உங்களது உரிமை: *www.justice.gov/crt/filing-charge.*
- உங்களது ஊதியம் அல்லது பணிச் சூழல்களை மேம்படுத்த, புகாரளிப்பது எப்படி என்பது உட்பட, மற்ற தொழிலாளர்களுடன் இணைவதற்கான உங்களது உரிமை: *www.nlrb.gov.*
- உடல்நலக் காப்பீட்டுக்கான உங்களது உரிமைகள், கடமைப்பொறுப்புகள் மற்றும் விலக்குகள்: *localhelp.healthcare.gov.*

**இந்தப் பிரசுரமானது, 2008ன் வில்லியம் வில்பர்ஃபோர்ஸ் மனிதக் கடத்தல் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு மறுஅதிகாரமளித்தல் சட்டம், பொதுச் சட்டம் 110-457ன் 202வது பிரிவுக்கு இணங்க உருவாக்கப்பட்டுள்ளது.**